**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

பி.வா.சா.1 – முருகன் OS.No.25/2021 நாள் : 19.01.2026

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

வங்கிகளின் விதிப்படி ஒருவர் எந்த வங்கிகணக்கில் இருந்து பணம் அனுப்பினாரோ அந்த பணம் யாருக்கு அனுப்பப்பட்டதோ அவருக்கே சொந்தம் என்றால் எனது வங்கி கணக்கிற்கு அனுப்பபட்ட பணத்தை எடுத்து நான் பாலாவின் அப்பாவிற்கே கொடுத்து விட்டேன். பணத்தை நான் வாதியின் அப்பாவிற்கு காசோலை மூலமாகவா அல்லது வரைவு காசோலை(demand draft) மூலமாக கொடுத்தேனா என்றால் அவரது கையில் ரொக்க பணமாகத்தான் கொடுத்தேன். ஒவ்வொரு முறையும் எனது வங்கி கணக்கில் அதிகமான பணம் வருவதால் அதனை பாலாவின் அப்பாவிற்கு கொடுத்ததற்காக ரசீது ஏதேனும் வாங்க வேண்டும் என்று எனக்கு தெரியுமா என்றால் நம்பிக்கையின் பேரில் நான் பணம் கொடுத்தேன். வாதி வங்கி பரிமாற்றத்தின் மூலமாக எனது வங்கி கணக்கிற்கு எனது பெயருக்கு ரூபாய் 17 லட்சம் அனுப்பினார் என்றால் சரியல்ல, ரூபாய் 14.5 லட்சம்தான் அனுப்பினார். எனது வங்கி கணக்கு விவர பட்டியலை 2016 முதல் 2018 வரையிலான காலக்கட்டத்திற்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, எதிர்தரப்பினர் தாக்கல் செய்துள்ளார். நான் எனது எதிர்வழக்குரையின் 4 வது பாராவில் வாதியிடம் பணம் வாங்கினேன் என்று ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வங்கி கணக்கில் திரும்ப செலுத்தியதாக சொல்லப்படும் தொகைக்கு ஏதேனும் எழுத்து மூலமான ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது, வங்கி கணக்கு விவர பட்டியல் உள்ளது. வாதி கொடுத்த பணத்தை நான் ஊரில் கந்து வட்டிக்கு கொடுத்து

பணம் சம்பாதித்தேன் என்றால் சரியல்ல. வாதி தான் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டதால் வாதியின் தனிப்பட்ட வாழ்க்கையை சித்தரித்து இழிவாக எதிர் வாதத்தில கூறியும் அவரது வாழ்க்கையை கேவலப்படுத்தி பணத்தை திரும்ப செலுத்தக்கூடாது என்று எதிர் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் உண்மையை மட்டும்தான் சொல்லியுள்ளேன். மேலும் வேண்டுமென்றே 1,2 ம் வாதிகளின் தாம்பத்திய வாழ்க்கையை கொடுமையான முறையில் சித்தரித்து உள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்வழக்குரையில் பத்தி 5 ல் நான் பணத்தை திரும்ப செலுத்திவிட்டதாக கூறுவதற்காக எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்றால் சரியல்ல. நான் பாலா எனது வங்கி கணக்கிற்கு அனுப்பிய பணத்தை பாலாவின் அப்பாவிடமும், பாலாவின் அப்பா என்னிடம் கொடுத்த பணத்தை பாலாவின் வங்கி கணக்கிற்கும் அனுப்பியுள்ளேன். நான் பணத்தை வாங்கி அதனை வைத்து கந்துவட்டி தொழில் நடத்திவிட்டு வாதியை ஏமாற்றுவதற்காக வாதியின் மீது தனிப்பட்ட முறையிலும் மற்றும் அவரை அவமானப்படுத்தும் நோக்கத்துடனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>பிரதிவாதி தரப்பு மறு விசாரணை</u>

இல்லை.

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.